# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சே. அய்யர், இ.ஆ.ப., (ஓ).

**********

முறையீட்டு மனு எண் : 785/பேரு/2016

ஆணை எண் : 135/2017

நாள் : 30.05.2017

M. சுமதி,
த/பெ(லேட்) முனியமச்சனி,
18/52.A,சன்னதி தெரு,
சோளிங்கர் – 631 102.
வேலூர் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
சோளிங்கர் பேரூராட்சி,
வேலூர் மாவட்டம். – எதிர் மனுதாரர்

வேலூர் மாவட்டம், சோளிங்கர், 18/52 A, சன்னதி தெருவில் வசிக்கும் திருமதி. M. சுமதி த/பெ (லேட்) முனியமச்சனி, என்பவருடைய 30.07.2016 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறை மன்ற நடுவத்தில் 04.08.2016 அன்று பெறப்பட்டு, 785/பேரு/2016 எண்ணிட்ட அசல் மனுவாகப் பதிவு செய்யப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

வேலூர் மாவட்டம், சோளிங்கர் பேரூராட்சியைச் சேர்ந்த திருமதி.M.சுமதி என்பவர் 30.07.2016 நாளிட்ட தனது மனுவில் 18/52 A, சன்னதி தெருவில் உள்ள வீட்டின் பின் பாகத்தை மனுதாரரின் தாயார் தனது 3–வது மகன் M.சேகருக்கு தான செட்டில்மெண்ட் கொடுத்து, பின்பு 16.12.2010 ல் அதை ரத்து செய்து பதிவு அலுவலகத்தில் பதிவு செய்துள்ளதாகவும், ஆனால் மேற்படி

சொத்தினை M.சேகர் போலியான ஆவணம் தயார் செய்து தனது மனைவி K. வரலட்சுமி என்பவருக்கு வீட்டின் பின் பாக சொத்தை பிரிவு செய்து சொத்துவரி பெயர்மாற்றம் செய்ய முயற்சி செய்ததாகவும் இது விஷயமாக தன் தாயார் அவர்கள் 03.08.2013, அன்று பேருராட்சி செயல் அலுவலர் அவர்களுக்கு ஆட்சேபனை கடிதம் எழுதினார்கள் என்றும், ஆனால் செயல் அலுவலர் அவர்கள் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் பிறகு இயக்குநர், டைரக்டர் ஆப் டவுன் பஞ்சாயத்து அவர்களுக்கு கடிதம் எழுதிய பிறகு 06.05.2015 அன்று சோளிங்கர் பேருராட்சியிலிருந்து கடிதம் வந்து அவர்கள் கேட்கப்பட்ட ஆவணங்களை கொடுத்தோம் என்றும் தெரிவித்துள்ளார். மேலும் 2 மாதம் கழித்து வரி வசூலிப்பவர் பெயர் மாற்றத்தை ரத்து செய்ததாகச் சொன்னார் என்றும் தன் தாயார் அவர்கள் இது விஷயமாக தகவல் அறியும் சட்டம் 2005 ன் படி தகவல் அளிக்கும்படி தகவல் அறியும் சட்ட அலுவலர் அவர்களுக்கு கடிதம் எழுதியும் எந்த விதமான பதிலும் பேருராட்சி அலுவலகத்திலிருந்து வரவில்லையென்றும், அவர்கள் சொத்துவரி எண் 5644ல் 2014 – 2015 வரை தன் தகப்பனார் முனியாச்சாரி பெயரில் வீட்டு வரி கட்டியுள்ளதாகவும் இருப்பினும் சொத்துவரி எண்.5644, K.வரலட்சுமி பெயரில் சொத்துவரி கட்டப்பட்டுவிட்டது என்றும் இதுவிஷயமாக செயல் அலுவலர் அவர்களை சந்தித்தும் எந்த விதமான தகவலும் சொல்ல மறுக்கிறார் என்றும், இது விஷயமாக O.S.No 37/2014 எண்ணில் சோளிங்கர் மாவட்ட உரிமையியல் நீதி மன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றும் தெரிவித்துள்ளார். தன் தாயார் கன்னம்மாள் அவர்கள் வீட்டின் பின் பாகம் (ரத்து செய்யப்பட்ட பின் பாகம்) தனக்கு பிறகு தன் மகள் M.சுமதி அடைய வேண்டியது என 01.02.2013 ம் தேதி அன்று பதிவு செய்யப்பட்ட தான செட்டில்மெண்ட் எழுதினார்கள் எனவும், 18.12.2015 அன்று தன் தாயார் கன்னம்மாள் அவர்கள் காலமானார்கள் எனவும், அவர் காலமான பிறகு உயிலின்படி வீட்டின் பின் பாகம் தனக்கு உரிமையாகிறது என்றும் சொத்திற்கு சம்மந்தமே இல்லாத K.வரலட்சுமி பெயரில் சொத்து பெயர் மாற்றம் செய்து சொத்து வரி விதிப்பு எண்.5644ல் 2015–2016 வரை புதிய சொத்து வரி கட்டியுள்ளார் என்றும் இந்த பெயர் மாற்ற நடவடிக்கைகளில் முறைகேடுகள் நடந்துள்ளன

என்றும், முறைகேடுகளில் ஈடுபட்டுள்ளவர்களின் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் திருமதி. வரலட்சுமி பெயரில் செய்த சொத்துவரி பெயர் மாற்றத்தை (சொத்துவரி விதிப்பு எண் 5644) ரத்து செய்யும்படியும் கோரியுள்ளார்.

2. இப்புகார் மனுதொடர்பாக முறைமன்ற நடுவ அறிவிப்பாணை எண்.785/பேரு-2/16, நாள்:31.08.2016-ன் வாயிலாக விளக்க அறிக்கை சமர்ப்பித்திட செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது. சோளிங்கர் செயல் அலுவலர், தனது 4.1.2017 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு விளக்கமளித்துள்ளார்.

சோளிங்கர் பேரூராட்சியில் சன்னதி தெரு கதவு எண்.18/52 A கொண்ட சொத்தானது திரு.முனியாச்சாரி என்பவரின் பெயரில் வரி விதிப்பு செய்யப்பட்டு வரி வசூலிக்கப்பட்டு வந்தது. இந்நிலையில் முனியாச்சாரி என்பவர் 12.08.2011-ல் காலமாகியுள்ளார். அதற்கு பிறகு முனியாச்சாரியின் மனைவி கன்னம்மாள் என்பவர் மேற்படி சன்னதி தெருவில் அமைந்துள்ள கதவு எண்.18/52A, கொண்ட சொத்தினை தன்னுடைய பிள்ளைகளான மகன் திரு. சேகர் மற்றும் மகள் திருமதி. சுமதி என்பவருக்கு தான செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் பிரித்து சோளிங்கர் சார்பதிவு அலுவலகத்தில் பதிவு செய்து கொடுத்துள்ளார்.

இந்நிலையில் தான செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் சேகர் என்பவர் (சன்னதி தெரு கதவு எண்18/52A) பெறப்பட்ட சொத்தை தன்னுடைய மனைவி பெயருக்கு செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் பதிவு செய்து கொடுத்துள்ளார். குறிப்பிட்ட ஆவணத்தின் அடிப்படையில் வரி விதிப்பு எண்.5644 கொண்ட சொத்திற்கான வரியை காலம் சென்ற முனியாச்சி என்பவர் பெயரிலிருந்து மேற்படி ஆவணங்களின் அடிப்படையில் செயல் அலுவலர் அவர்களின் உத்தரவு எண்.ஒ.மு.477/2013 நாள்.11.07.2013 -ன் படி திருமதி.வரலட்சுமி என்பவர் பெயருக்கு பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

வரி விதிப்பு எண்.5644 கதவு எண்.18/52A, கொண்ட சொத்திற்கான வரியை ஏற்கனவே திருமதி. வரலட்சுமி என்பவருக்கு பெயர் மாற்றம் செய்யப்பட்டுவிட்ட காரணத்தால் பாதிப்பளவு

சொத்திற்கு திருமதி. சுமதி என்பவருக்கு உண்டான பாகத்தினை அளந்து அளவுகளின் படி வரி விதிப்பு செய்யவேண்டும் என்றும் பொய்யான பத்திரம் மூலம் பெயர் மாற்றம் எதும் செய்யவில்லை என்றும், உரிய வழிமுறைகளின்படிதான் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதார் திருமதி M.சுமதி 30.07.2016 தேதியிட்ட கடிதத்திலும் சோளிங்கர் பேரூராட்சி செயல் அலுவலரது 04.01.2017 நாளிட்ட ந.க.எண்.477/2013 கடிதத்திலும் சொத்துவரி பெயர் மாற்றம் குறித்து (தொடர்புடைய சொத்து கதவு எண்.18/52 A, சன்னதி தெரு, சோளிங்கர்) மாவட்ட உரிமையியல் நீதி மன்றத்தில் தொடர்ந்த வழக்கு எண்.O.S.No.37/2014 நிலுவையாக உள்ளது என தெரிவித்துள்ளார்கள். 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்ட விதிகள் 10, உட்பிரிவு (3) (b) ன் கீழ் விசாரணைக்கு உகந்ததல்ல என முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது. மேலும் வழக்கு தீர்ப்பின் அடிப்படையில் உரிய ஆவணங்களை ஆய்வு செய்து தகுந்த நடவடிக்கை எடுத்திட சோளிங்கர் பேரூராட்சி செயல் அலுவலரை வலியுறுத்தியும் ஆணையிடப்படுகிறது.

2017 ஆம் ஆண்டு மே திங்கள் 30 ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

/ஒம்/
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்

பெறுநர்
M. சுமதி,
க/பெ. (லேட்) முனியாச்சாரி,
கதவு எண்.18/52A, சன்னதி தெரு,
சோளிங்கர் – 631 102,
வேலூர் மாவட்டம்.

செயல் அலுவலர்,
தேர்வு நிலை பேரூராட்சி,
சோளிங்கர், வேலூர் மாவட்டம்.